**தலைப்பு 253 – ஓய்வூதிய திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 253 – ஓய்வூதிய திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதிய திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து

பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தற்போது திணைக்கள வளாகத்தில் வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் 10 நிறுவனங்களில் இருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா 6.3 மில்லியன் வாடகை வருமானம் நிலுவையாக காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 1.4 மில்லியன் தொகையானது 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பழமையான மீதிகள் ஆகும். | தொடர்ந்து அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | நிலுவை வருமானத்தினை துரிதமாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2001 ஜனவரி 15 ஆம் திகதிய 1/2001 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 1 (அ) ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் கணக்கு பொழிப்புகள் மூலம் வரவு மற்றும் செலவு வைக்கப்பட்ட பங்களிப்பு பணம் தொடர்பில் அறிக்கையொன்று அதற்கடுத்த மாதத்தின் 15 ஆம் தேதிக்கு முன்னர் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் | ஒரு சில மாற்றங்கள் காரணமாக ஒவ்வொரு தலைப்புகளுக்கும் உரிய நிறுவனங்களின் சேகரிப்புகள், இரத்து செய்தல்கள் போன்ற காரணங்கள் முரண்பாடு தொடர்பில் தாக்கமளித்துள்ளதுடன் வருமானங்களை கணக்குகளுக்கு வரவு வைத்தல் தொடர்பில் உரிய நிறுவனங்களில் இருந்து வரவு அறிவித்தலை கோரி அனுப்பியுள்ளதுடன் தற்போது வரவு அறிவித்தல்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டினுள் ஏனைய நிறுவனங்களால் செலவு வைக்கப்பட்ட ரூபா 22,080.9 மில்லியன் தொகையான பங்களிப்பு பணம் தொடர்பில் செலவு அறிவித்தலை வரவழைப்பதற்கு மற்றும் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3.6 மில்லியன் வரவு வைத்தல்களுக்கு ரூபா 3.5 மில்லியன் தொகையை உறுதிப்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களில் இருந்து வரவு அறிக்கையை வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட்டவாறு உள்ளமை. | |
| (இ) | சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணம் (விதவைகள்/தபுதார் மற்றும் அனாதைகள் பங்களிப்பு பணம்) மத்திய அரசுக்கு மற்றும் வருமான கணக்கின் கீழ் பங்களித்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் தரவு கட்டமைப் போன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள காரணத்தால் சமூக பாதுகாப்பு முறையின் நலன்களை பெற்றுக் கொள்வதற்கு குறித்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் தகவல் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் அதற்கமைய ஒரித்துடைய விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய மற்றும் பங்களிப்பு பணத்தை செலுத்துதல் போன்ற நலன்களை பெற்றுக் கொள்ளும் போது பங்களிப்பு பணத்தை திட்டவட்டமாக தொடர்ச்சியாகவும் கிடைத்ததா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | அரச துறையின் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்பு இல்லாது (online Reregistration செய்தல் அனைத்து அரசு நிறுவனங்களிலும் இடம்பெறாமை) இந்த நிகழ்ச்சி திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாது உள்ளமை. | பங்களிப்பாளர்கள் மற்றும் பங்களிப்பு கொடுப்பனவு தொடர்பில் தரவு கட்டமைப்பு ஒன்றினை பேணுவதன் மூலம் உங்களுக்கு பணம் கிடைத்ததா என்பதை திட்டவட்டமாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சி திட்டத்தின் (1) இன் கீழ் மூன்று செலவின விடயங்களுக்காக பாதிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 6,500,000 தொகையினை விஞ்சி நிதிப்பிரமாணம் 66/69 மூலம் ரூபா 4,580,000 தொகை அதாவது 70.46 சதவீதமான நிதியேற்பாடு மாற்றல்கள் இடம்பெற்றுள்ளதுடன் அதற்கு அமைய தேறிய செலவினம் ரூபா 11,002,993 ஆகும்.□ | அலுவலகப் பணிகள் விரிவடைந்தமையின் அடிப்படையில் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும், சுற்றுலா விடுதிகளுக்கு சலவை இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கும் தேவையான நிதியேற்பாடு மிகை நிதியேற்பாடு நிலவிய செலவின விடயங்களில் இருந்து மாற்றல் செய்யப்பட்டு ஈடுபடுத்தப்பட்டுள்ளமை. | சரியாக செலவினங்கள் இனம் காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2507 செலவின விடய இலக்கம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினத்திற்காக பாதிடப்பட்ட மதிப்பீட்டு நிதியேற்பாடு ரூபா 700,000 தொகையானது குறித்த ஆண்டில் செலவு செய்யப்படாது ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தமையால் செலவினங்களை உரிய முறையில் இனங்காணாது மதிப்பீடு இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ஆராய்ச்சி பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்ததுடன் நிதி ஏற்பாட்டினை மிகவும் செயத்திறனாக ஈடுபடுத்தும் நோக்கில் தேவைப்பாட்டின் பிரகாரம் மாற்றப்பட்டு அத்தியாவசியமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | செலவினங்களை சரியாக இனங்கண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 10,350,870 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023/12/31ஆம் திகதியில் ஏனைய செலவினங்கள் ரூபா 10,350,870 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டு அதற்குரிய | பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்கு பிரிவிற்கு 2024 ஆம் ஆண்டிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால், 2023 ஆம் ஆண்டுக்கு உரிய பொறுப்பொன்றாக பொறுப்புகள் கூற்றில் பதிவு செய்யப்படவில்லை என்பது. | |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஓய்வூதியம் செலுத்தும் நடைமுறை தொடர்பாக மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக மீளாய்வினை மேற்கொண்டு காலத்துக்கு காலம் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையில் அத்தியவசியமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 2010 திசெம்பர் 16 ஆம் திகதிய 13/2010 ஆம் இலக்க மற்றும் 2013 செப்டம்பர் 20 ஆம் திகதிய 03/2013 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்க | 473,617 | மறு திருமணம் செய்து கொள்ளும் விதவைகளுக்கு விதவைகள் மற்றும் தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தில் இருந்து 50 சதவீதம் உரித்துடைய போதிலும் மறு திருமணத்தின் பின்னரும் முழுமையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தமையால் ஹங்வெல்ல மற்றும் தம்புள்ள பிரதேச செயலகங்களின் ஓய்வு பெற்ற இரு உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ஹங்வெல்ல பிரதேச செயலகத்தில் உறுதிப்படுத்துவதற்கு சம்பளம் மற்றும் பதிவேடுகள் பணிப்பாளர் சபையிடம் விசாரித்து அனுப்பப்பட்டுள்ளமை ம மற்றும் தம்புள்ள பிரதேச அலுவலகத்தில் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு தரவு கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஜனவரி 10 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 2010 செப்டம்பர் | 31,953,239 | அரசாங்க ஊழியர் ஒருவருக்கு கிடைக்கும் ரூபா 7,800 தொகையான வாழ்க்கைச் செலவின படியினை விஞ்சி ஓய்வு பெற்ற ஒருவருக்கு வாழ்க்கைச் செலவினபடி செலுத்த கூடாத போதிலும், | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலகங்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. (தரவு கட்டமைப்பின் பிரகாரம் இனம் காணப்பட்ட) சந்தர்ப்பங்களுக்கு பதில் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 திகதிய 8/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை . | | மரணமடைந்த மற்றும் ஊனமுற்ற இராணுவ வீரர்களில் தங்கி வாழ்வோருக்கு இராணுவ சேவையின் சம்பளத்துடன் தரவு கட்டமைப்பின் பிரகாரம் 116 சந்தர்ப்பங்களில் இப்பாகமுவ, வரக்காபொல மற்றும் தம்புள்ள பிரதேச செயலகங்களில் நான்கு சந்தர்ப்பங்களில் வாழ்க்கைச் செலவினப்படிகள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டிருக்கவில்லை) | |
| | 94,478,613 | வாழ்க்கை செலவின படியுடன் அரச சம்பளத்தை பெற்றுக் கொண்டால், அவ்வாறு சம்பளம் பெறும் காலப்பகுதியினுள் ஓய்வூதியத்திற்கு வாழ்க்கை செலவினப்படி உரித்தற்ற போதிலும் அவ்வாறு வாழ்க்கைச் செலவினப்படி செலுத்தப்பட்ட காரணத்தால் களுத்துறை, தம்புள்ளை, மெடதும்பர, ஹன்வெல்ல, பமுனகொடுவா, மாத்தறை, மாவனெல்ல, கேகாலை ஆகிய பிரதேச | கூடுதலாக செலுத்தியவற்றை அறவிடவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலகங்களின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செயலகங்களில் தரவு கட்டமைப்பின் பிரகாரம் 269 சந்தர்ப்பங்களில் வாழ்க்கைச் செலவினபடி கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| | | 12,328,059 | வாழ்க்கை செலவினப்படியை ரூபா 7,800 வரையிலும் பெற்றுக் கொள்ள இயலுமான போதிலும் தம்புள்ளை, ஹன்வெல்ல, வரகாபொல, பமுனகொடுவ, மாத்தறை, கேகாலை, இப்பாகமுவ, வீரம்புகெதர, ஹிகுரக்கொட, யட்டிநுவர, பிங்கிரிய, இப்பாகமுவ, நாரம்மல, குருநாகல், அலவ்வ, பொல்கஹவெல மற்றும் ரிதிகம. ஆகிய பிரதேச செயலகங்களின் 64 ஓய்வூதியதாரர்களுக்கு வாழ்க்கை செலவின படிகள் குறைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிலுவையுடன் எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச அலுவலகங்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 நவம்பர் 03 ஆந் திகதிய 13/2014 ஆம் | 13,743,400 | ஒன்றுக்கு மேற்பட்ட ஓய்வூதியங்களை திரண்ட அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் மாதாந்தம் | கூடுதலாக செலுத்தப்பட்டவற்றை எதிர்காலத்தில் அறவிடுவதாக பிரதேச செயலகங்களினால் குறிப்பிடப்பட்டுள்ள | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | செலுத்தப்படும் கொடுப்பனவோ ஒருங்கிணைந்த ஓய்வூதியத்துக்கு மாத்திரம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் ஹன்வெல்ல, மாத்தறை, கேகாலை, அக்குரணை, யட்டிநுவர, பிங்கிரிய, மாவனெல்ல, திவுலபிட்டிய, களுத்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் மற்றும் தரவு கட்டமைப்பின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட இனம் காணப்பட்ட 47 ஓய்வூதியதாரர்களுக்கு இடைக் கொடுப்பனவு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | மை. | |
| (ஈ) | 2019 ஜூன் 11 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 2,522,000 | நபர் ஒருவர் விதவைகள் ஓய்வூதியத்துடன் சார்பு படியினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் விதவைகள் ஓய்வூதியம், ஓய்வுதிய சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இன் பிரகாரம் திருத்தப்பட்ட பின்னர் சார்பு படியாக செலுத்தப்படும் இடைக் கொடுப்பனவோ நிறுத்தப்பட | கொடுப்பனவு செய்யப்பட்ட இடைக்கால படிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட படிகள் தவணை முறையில் அறவிடவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வேண்டிய போதிலும் கேகாலை மற்றும் வரக்காபொல பிரதேச செயலகங்களில் அவ்வாறு நிறுத்தப்படாது சார்பு கொடுப்பனவுக்கு இடைக்கால கொடுப்பனவு செலுத்தப்பட்டமையால் அந்த படிகள் கூடுதலாக செலுத்தப்பட்டு இருந்தது. | | |
| (உ) | 2019 ஜூலை 26 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க திருத்தப்பட்ட II ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 10,337,836 | 55 வயது வரையிலும் முப்படையின் மூலம் சம்பளம் பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு மற்றும் அவர்களின் தங்கி வாழ்பவர்களுக்கு வேதன மாற்றங்கள் உர்த்தற்றது என குறிப்பிடப்பட்டுள்ள போது தரவு கட்டமைப்பின் பிரகாரம் இராணுவ சம்பளம் பெறும் 45 தங்கி வாழ்வோரின் மற்றும் வரக்காபொல பிரதேச செயலகலகத்தின் 04 ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியமும் திருத்தப்பட்டு செலுத்தப்பட்டிருந்த காரணத்தால் ஓய்வூதியம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | சரியான சம்பள படிமுறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஊ) | 2022 ஜனவரி 20 ஆந் திகதிய 01/2022 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | | | |
| | • 2 ஆம் பந்தி | 1,995,000 | தம்புள்ளை, பிங்கிரிய, ஹிகுராக்கொட, மற்றும் பமுனகொடுவ ஆகிய பிரதேச செயலகங்களில் உள்ள 18 ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 5000 கொடுப்பனவு வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச செயலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | • 2(ii) ஆம் பந்தி | 21,640,000 | விதவை ஓய்வூதியம் பெறும் அரசு ஊழியர்களுக்கு சம்பளத்துடன் ரூபா 5,000 உரித்துடையது என்று கூறப்பட்டாலும், இந்த உதவித்தொகை ஓய்வூதியத்துடன் இந்த உதவித்தொகைக்கு உரித்தற்றது என குறிப்பிட்டு தரவு கட்டமைப்பின் படி, 223 அரசாங்க உத்தியோபத்தர்களுக்கு விதவைகள் ஓய்வூதியத்துடன் 2022 ஜனவரி முதல் 2023 ஆகஸ்ட் வரை | ரூபா 5000 உதவித்தொகை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக செலுத்திய தொகையை திரும்பப் பெற கணினியில் தரவு உள்ளிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா 5,000. கொடுப்பனவு அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| • | 2(iii) ஆம் பந்தி | 3,509,000 | உயிரிழந்த ஆயுதப்படை அதிகாரிகளின் 55 வயது வரையில் தங்கியுள்ளவர்களுக்கு ஓய்வூதியத்துடன் கூடிய சிறப்புக் கொடுப்பனவாக ரூபா 5,000 வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், தரவு கட்டமைப்பின் பிரகாரம் 39 தங்கிவாழ்வோருக்கு மற்றும் 13 தங்கிவாழ்வோருக்கு இப்பாகமுவ, கேகாலை, வரக்காபொல மற்றும் மாத்தறை பிரதேச செயலகங்களுக்கு சேவை கொடுப்பனவுடன் கூடிய விசேட கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 5000 உதவித்தொகை நிறுத்தப்பட்டதாகவும், மேலதிகமாக செலுத்திய தொகையை தவணை முறையில் வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2022 ஜூன் 22 ஆந் திகதிய 14/2022, 14/2022(i) ஆம் இலக்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2022 | 47,246,326 | வெளிநாட்டு விடுமுறைகளை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் உரிய முறையில் பதிவு செய்யாத காரணத்தால்விதவைகள் தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு பண சுற்றறிக்கையின் | சுற்றறிக்கையின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பின் சரியாகப் பதிவு செய்யப்படாத மற்றும் நிலையான கட்டளை ஒன்று அல்லாத நடைமுறையின் ஊடாக மற்றும் இனம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செப்டம்பர் 20 ஆம் திகதிய 06/2022 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும் உத்தியோகத்தரை இடங்கால முடியாத காரணத்தால் பங்களிப்பு பணம் மாதாந்தம் (2022 நவம்பர் மாதம் முதல் 2023 பெப்ரவரி மாதம் வரையிலும்) இனங்காணப்படாத பெறுவனவுகளாக பொது வைப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | காணுவதற்கு தொடர்பற்ற பண செலவு வைத்தல்கள் காரணமாக உருவாகியுள்ள இந்த காசு மீதியை காணும் வரையிலும் பொது வைப்புக்கணக் ஒன்றில் செலவு வைத்து கணக்கு வைக்கப்படுகின்றமை. |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 5,237,605 வைப்பு பணம் நிதிப்பிரமாணம 571(3) இன் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது அல்லது அரசாங்க வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | மில்கோ பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடம் இருந்து அறவிடப்படவுள்ள நிலுவை கட்டிட வாடகை அறவிடப்படும் வரையிலும் வைப்புக்கணக்கு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் தேசிய ஓய்வூதிய தினத்திற்காக நடத்தப்பட்ட விழாவிற்கு தனியார் நிறுவனங்களால் வெகுமதிகளாக கிடைத்த பணமானது எதிர்வரும் ஓய்வூதிய தினங்களுக்கு பயன்படுத்துவதற்காக வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பது. | நிதிப்பிரணமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.7 வங்கி கணக்கு செயற்பாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | இரு வங்கி கணக்குகளுக்கு உரியதாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்க கூற்றின் பிரகாரம் இனங்காணபட்டிராத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 13,669,514 தொகையான 125 காசோலைகள் 2024 மே 16 ஆம் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்கண்டு தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | உள்ளாட்சி சேவையில் உள்ள விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் மற்றும் உள்ளாட்சி சேவைகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் தொடர்பான வங்கி கணக்குகள் கடந்த பல ஆண்டுகளாக செயலிழந்த கணக்குகளாக உள்ளதுடன், அவற்றை மூடுவதற்கு அல்லது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 07/2006 இன் பிரகாரம் வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 425 மற்றும 426 இன் படி, பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு இணங்க திறைசேரியால் நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் இந்த நிதியங்கள் மூடப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளன. இந்த நிதியங்கள் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டிருப்பதால், நிதியத்தை மூடுவது தொடர்பான கொள்கை தீர்ானம் எடுக்கப்படும் வரை வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு சட்டப்பூர்வ அதிகாரம் இதுவரை வழங்கப்படவில்லை என்பது. | செயற்பாடற்ற கணக்குகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இழப்புகள் மற்றும் நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி அளவில் தொடர்ந்து அறவிடப்பட வேண்டிய கூடுதலாக செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தின் பெறுமதி ரூபா 936.1 மில்லியன் ஆகும். இந்த பெறுமதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபா 1.5 மில்லியன் தொகையும் 5 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன் கொண்டுவரப்படும் ரூபா 48.9 மில்லியன் தொகையினையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு உரிய ரூபா 885.7 மில்லியன் தொகையினையும் கொண்டுள்ளது. | 2023/12/31 ஆம் திகதியில் திகதியில் உள்ளபடியாக மீண்டும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 885.7 மில்லியன் ஆகும். | மிகை செலுத்தல்கள் துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) யட்டிநுவர பிரதேச செயலகத்தின் 06 ஓய்வூதியதாரர்களுக்கு சம்பள திருத்தங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்காத வகையில் இடைக்கால கொடுப்பனவாக ரூபா 872,000 கூடுதலாக செலுத்தப்பட்டு இருந்தது. | மிகை கொடுப்பனவுகள் அறவிடப்பட்டு ஓய்வூதியத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளமை. | மிகை கொடுப்பனவுகள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கேகாலை பிரதேச செயலகத்தின் நான்கு ஓய்வூதியதாரர்களுக்கு உரிய அங்கவினர்களுக்கான ஓய்வூதியம் 2018 ஜூலை 17 ஆம் திகதிய 9/2008 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) இன் பிரகாரம் சீராக்கபட்டிருந்த போதிலும் அந்த ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 536,008 தொகை 2023 நவம்பர் வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை . | மிகை கொடுப்பனவுகள் தவணை முறையில் அறவிடப்பட்டவாறு உள்ளமை. | மிகைக் கொடுப்பனவுகள் சரியாக கணிப்பிடப்பட்டு துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | இராணுவ வீரர்களுக்கான அங்கவீன ஓய்வூதிய கொடுப்பனவினை பரிசோதித்த போது இராணுவ சேவை சம்பளத்துடன் வாழ்க்கை செலவினப்படி செலுத்தப்பட்ட காரணத்தால் ஓய்வூதியத்துடன் செலுத்தப்படும் வாழ்க்கை செலவினப்படி சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் 23 ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,715,550 தொகை 2023 நவம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை என்பது தரவு கட்டமைப்பினை பரிசோதித்த போது வெளிப்படுத்தப்பட்டது. | மிகை கொடுப்பனவுகள் தவணை முறையில் அறவிடுவதற்கு தரவு கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | மிகை கொடுப்பனவினை துரிதமாக அறவிட வேண்டும். |
| (உ) | பமுனாகொட்டுவ பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய பெறுனர் ஒருவருக்கு சார்பு படியாக 2013 மார்ச் மாதம் முதல் 2023 | மிகை கொடுப்பனவுகள் தவணை முறையில் அறவிடுவதற்கு தரவு கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது | மிகை கொடுப்பனவினை துரிதமாக அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செப்டம்பர் மாதம் வரையிலும் ரூபா 342,900 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | என்பது. | |
| (ஊ) | 2014 ஜனவரி 10 ஆம் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் மாதாந்தம் பெற்றுக் கொள்ளும் வாழ்க்கை செலவின படியானது ரூபா 7,800 தொகையினை விஞ்சி ஓய்வூதியதாரர் ஒருவருக்கு வாழ்க்கை செலவின படியினை பெற்றுக்கொள்ள முடியாது. அதை அடிப்படையாகக் கொண்டு ஒரே விடயத்தை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியத்திற்கு மற்றும் படிகள் ஆகிய இரண்டிற்கும் வாழ்க்கை செலவின படியினை செலுத்தியமை சர்ச்சைக்குரிய விடயமாக கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. அமைய ஓய்வூதியம் மற்றும் சார்பு படிகள் இரு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த காரணத்தால் பமுனகொடுவா, வீரம்புகெதர, ஹன்வெல்ல, இப்பாகமுவ பிரதேச செயலகங்களின் 16 ஓய்வூதியதாரர்களுக்கு ரூபா 5,938,755 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 1/2014 இன் பிரகாரம் ரூபா 7,800 இனை விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதால் மிகை கொடுப்பனவு இடம்பெற்றிருக்கவில்லை என்பது. | ஒரே விடயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஓய்வூதியம் மற்றும் சார்பு பணிகள் ஆகியவற்றுக்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவின படியும் இரு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டமை தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | ஓய்வூதிய பிரிவினால் மரணம் அடைந்த வெளிநாட்டு ஓய்வூதியதாரர்கள் (2023 ஆம் ஆண்டுக்கு | தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் | மிகைக் கொடுப்பனவுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மிகை கொடுப்பனவுகளை |

| | | | |
|---|---|---|---|
| | முன்னைய வருடங்கள்) என இனங்காணப்பட்ட ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள வங்கியில் இருந்து மீள பெற்றுக் கொள்ள வேண்டிய மீதிகள் 2023 ஆம் ஆண்டில் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள ஓய்வூதியத்தை அறவிடுதல் தொடர்பான பதிவேட்டின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 29,539,809 ஆன தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த மீதியினுள் 2023 ஆம் ஆண்டுக்கு முன்னைய வருடங்களிலும் மரணம் அடைந்த ஓயூதியதாரர்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள ஓய்வூதியம் ரூபா 15,506,715 காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை. | துரிதமாக அறவிட வேண்டும். |
| (ஏ) | மஹரகம, கெஸ்பேவ மற்றும் கடுவெல பிரதேச செயலகப் பிரிவுகளில் 05 ஓய்வூதியர்களின் இறப்புத் திகதி அடையாளம் காணப்பட்ட போதிலும், மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 1,936,086 தொகை 2023 நவம்பர் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்கள் தெரிவித்துள்ளனர். | மிகைக் கொடுப்பனவு இடம்பெறாத வகையில் மரணமடைந்த திகதிகளை துரிதமாக இனங்கண்டு ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட வேண்டியதுடன், மேலதிக கொடுப்பகவுகள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (ஐ) | தம்புள்ளை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த இரண்டு ஓய்வூதியர்களுக்கு அதிகளவில் | மேலதிகமாக செலுத்தப்பட்ட ஊனமுற்றோர் கொடுப்பனவை மீளப்பெறுவதற்கு கணினிக் | மேலதிக கொடுப்பகவுகள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட ஊனமுற்றோருக்கான சம்பளமான ரூபா 323,763 தொகை மீளப் பெறப்படவில்லை. | கட்டமைப்பில் தரவுகள் உள்ளிடப்படும் என பிரதேச செயலாளர் குறிப்பிட்டுள்ளார். | |

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வெளியிடப்பட்ட 42 கணக்காய்வு ஐயவினாக்கயில் 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகங்கள் அனுப்பும் பதில்களில் குறைபாடு உள்ளதால், அவற்றை சரிபார்த்து, அந்த அலுவலகங்களுக்கு தெரிவித்து, குறைபாடுகளை சரி செய்து, மீண்டும் விடைகளை பெற்று, இறுதி விடையை தயார் செய்ய வேண்டும், அதனால், அதற்கு கால தாமதம் ஏற்படும். | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) யட்டிநுவர பிரதேச செயலகத்தின் ஓய்வு பெற்ற ஒருவர் தொடர்பில் விதவையின் விவாகரத்து சான்றிதழை பரிசோதிக்காது திருமண சான்றிதழின் அடிப்படையில் ஓய்வூதியம் இயக்கப்பட்டு இருந்த காரணத்தால் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 355,743 என்பது அவதானிக்கப்பட்டது. | யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் 1430 தொடர்பில் வழக்கு அறிக்கை அல்லது அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் எதுவும் பதிவேட்டு அறையில் இல்லாதிருந்ததாக குறிப்பிட்டுள்ளதுடன் திருமண சான்றிதழுக்கு (இரண்டாவது) இணங்க தொடர்ந்தும் மன்னிய சிங்கம் என்பவரின் விவாகரத்து பெற்ற கணவராக 1430 இலக்கமுடைய வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளமை. | இலக்கம் 1430 இன் கீழ் விவாகரத்து பெற்றுள்ளதாகவும் திருமண சான்றிதழ் இலக்கம் 7870 இன் கீழ் திருமணம் புரிந்துள்ளதாகவும் குறிப்பிட்டு விதவையால் சத்திய பிரமாணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கான சான்றுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 15-14578 ஆம் இலக்கமுடைய ஓய்வூதியம் 2022 ஏப்ரல் மாதம் முதல் நிரந்தரமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2008 ஜனவரி 01 முதல் 2022 மார்ச் 10 ஆம் திகதி வரையிலும் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,419,750 தொகையில் ரூபா 1,405,750 அறவிடுவதற்கு 2023 நவம்பர் வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 அறிக்கையில் பரிந்துரையின் பிரகாரம் சம்பள மாற்றம் தயாரிக்கப்பட்டு நிலுவைத் தொகையினை செலுத்த வேண்டும் எனின் அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேலதிக கொடுப்பனவுகளை துரிதமாக அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தம்புள்ளை பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் அநாதைப் பிள்ளையொன்றின் 26 வயது பூர்த்தியடைந்ததன் பின்னர் மற்றைய அநாதைப் பிள்ளைக்கு பெற வேண்டிய மொத்த சம்டபளத்துடன் வாழ்க்கைப் படிச் செலவினம் மற்றும் இடைக்கால கொடுப்பனவுகள் வழங்கப்படாமையின் காரணமாக ரூபா 500,491 குறைவாகவே செலுத்தப்பட்டிருந்தது. | முறையாக பரிசோதித்த பின்னர் செலுத்தப்படவுள்ளது என்பது. | பரிசோதிக்கப்பட்டு துரிதமாக செலுத்தப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்திக்கான குறிக்கோள்களின் கீழ் ஓய்வூதிய திணைக்களத்தினால் ஒரு குறிக்கோள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. அக்குறிக்கோள் சம்பந்தமாகவும் | இக்குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதலினை ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் மாத்திரம் மேற்கொள்ள முடியாத போதிலும் ஓய்வுபெற்றதன் பின்னர் வழங்கக்கூடிய பிரதிபலன்கள் தொடர்பாக | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தெளிவான இலக்கு தோற்றுவிக்கப்படாததுடன் அடிப்படையான தரவும் செயல்முன்னேற்றத்தினை அளவீடு செய்யும் குறிகாட்டியையும் முறைப்படியாக தோற்றுவித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அமுல்ப்படுத்துவதற்காக நிறுவனத்தின் கடமைகளுடன் தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்களும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சமூகத்தின் அனைத்து பிரிவினையும் உள்ளடக்கும் வகையில் வரிவான ஓய்வூதிய உள்ளடக்க முறைமையினை தயாரிப்பதற்குரிய அடிப்படை கருதுகோள் மற்றும் பிரேரணை 2020 ஆம் ஆண்டின் ‘‘அனைவருக்கும் ஓய்வு” பிரேரணையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. | |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சிறுவர்களின் 18 வளதைப் பூர்த்தியடைந்த பின்னர் உரிய வங்கிப் புத்தகங்களை சிறுவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், குருநாகல பிரதேச செயலகத்தின் ரூபா 613,636 கூட்டுப் பெறுமதியான 04 வங்கிப் புத்தகங்கள் மற்றும் 01 நிலையான வைப்புச் சான்றிதழ் அந்த சிறுவர்கள் உரிய முகவரிகளில் வசிக்காமையால் அவர்களுக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவர்கள் அந்தந்த முகவரிகளில் வசிக்காமையால் விடுவித்தல் பிரச்சினைக்குரியதா உள்ளமை. | 18 வயது நிறைவடைந்த பின், சிறார்களுக்கு உரிய வங்கிக் கடவுச்சீட்டு புத்தகம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2012 பெப்ரவரி 27 ஆந் திகதி 60 வயதினைப் பூர்த்தி செய்த ஓய்வுபெற்ற மருத்துவர் ஒருவருக்கு பொலன்னறுவை சுகாதார சேவைகள் பணிப்பாளர் | ஓய்வூதியம் தயாரிப்பதற்காக, முதற் தடவை கோவை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கிடைத்தது 2014.04.02 ஆந் | தகவல்களை பூர்த்தி செய்து உடனடியாக பணம் செலுத்தத் ஆரம்பிக்கவும். |

| | |
|---|---|
| அலுவலகத்தினால் தகவல் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டமையால் 2024 சனவரி மாதமளவில் 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ஓய்வூதியத்தினை வழங்க முடியாதிருந்தது. | திகதியே ஆகும். அத்துடன், கோப்பைச் சரிபார்த்த பிறகு, அதன் குறைபாடுகள் பல முறை வெளியே கொண்டு வரப்பட்டன, ஆனால் ஓய்வூதியத் திணைக்களத்தால் கோரப்பட்ட ஆவணங்கள் (2023.07.05 தேதியிட்ட கடிதத்தில்) மருத்துவரிடமிருந்து தனிப்பட்ட கோப்பில் இல்லை என்பதால், அந்தத் தகவலைக் கோரி மேலும் பல நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், தொடர்புடைய குறைபாடுகள் உடனடியாக நிரப்பப்படும் என்பதும். |